9865306197, 8925677710
டால்பின் பப்ளிகேசன்ஸ், ஸ்ரீவில்லிபுத்தூர் - 626125

12-ஆம் வகுப்பு தமிழ்

**அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2022 - விருதுநகர் மாவட்டம்**

1. அடிஎதுகை, சீர்மோனை, 2. பொருட்குறிப்பு, 3. திருமணமும் குடும்பமும், 4. பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி, 5. தாழைமடல், 6. இசைக்கருவி, 7.வினைத்தொகை, 8. பன்னிரண்டு அடிகளுக்கு மேல், 9. 4, 1, 2, 3, 10. விருத்தப்பா-நாலடியார், 11. வளர்ந்த, 12. சாந்தா தத், 13. தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும், 14. திண்டிவனம்

15. செந்நிறத்து வானம்போலத் தங்கள் கைகள் சிவந்திட உழைக்கும் தொழிலாளர்களின் வியர்வை வெள்ளம்அவர்களின் திரண்ட தோள்மீது முத்துமுத்தாய் வீற்றிருக்கும். இந்த அழகினை வியந்து பாடச் செந்தமிழின் துணைவேண்டுமெனக் கவிஞர் சிற்பி கூறுகின்றார்.

16. மழைக்காலப் பகற்பொழுதில் சூரியனின் வெளிச்சம் இல்லாமல் நகரமானது மழைமேகத்தால் இருள் சூழ்ந்து காணப்படும். மழை பெய்து ஓய்ந்த பின்பு, மழைக்கான சுவடுகள் அழிந்த பின்பு சூரியன் திடீரென தன் முகத்தைக் காட்ட மழை மேகத்தால் மறைந்திருந்த நகரம் பிரகாசமாய்க் காட்சியளிக்கின்றது. இன்னும் உறிஞ்சப்படாமல் இருக்கும் ஒரு சில மழைத் துளிகளின் மீது விழுகின்ற சூரியக் கதிர்களின் பிரதிபலிப்பால் நகரமே வெள்ளை வைரமாகக் காட்சியளிக்கின்றது.

17. பெருங்கடல் - சிறுகுடி - இதுவே இத்தொடரில் உள்ள முரண் நயமாகும்.பரதவர் மீன் பிடிக்கும் கடல் பெரியது. ஆனால் அவர்கள் வாழும் இடமோ சிறுகுடி என்று கூறப்பட்டுள்ளது.

18. **“அறிவுடை வேந்தன் நெறி அறிந்து கொளினே கோடி யாத்து, நாடு பெரிது நந்தும்”** அறிவுடை அரசன், வரி திரட்டும் முறை அறிந்து மக்களிடமிருந்து வரி திரட்டினால் நாடு, கோடிக்கணக்கில் செல்வத்தைப் பெற்றுச் செழிப்படையும்.

19. **புக்கில்:** புக்கில் என்பது தற்காலிகமாகத் தங்கும் இடத்தைக் குறிக்கும். “துகள் அறுகேள்வி உயர்ந்தோர் புக்கில்” என்ற புறநானூற்றுப் பாடலில் (222:6) வரும் ‘புக்கில்’ என்பது தற்காலிகமாகத் தங்கும் இடத்தைக் குறிக்கின்றது.
**தன்மனை:** திருமணத்திற்குப் பின் கணவனும் மனைவியும் பெற்றோரிடமிருந்து பிரிந்து தனியாக வாழும் இடம் ‘தன்மனை’ என அழைக்கப்பட்டது.

20. நிகண்டு, நன்னூல், காரிகை, தண்டியலங்காரம், நீதி நூல்கள், கணிதத்தில் கீழ்வாயிலக்கம், மேல்வாயிலக்கம், குழிமாற்று முதலிய பலவகை வாய்பாடுகள், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் போன்றவை அக்காலத்துக் கல்விமுறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்களாகும்.

21. பருவநிலை மாற்றங்களை அறிந்து எந்தப் பருவத்தில் எதைப் பயிர் செய்தால் விளைச்சல் கைகூடி வரும். உழைப்புக்குப் பலன் கிட்டும் என்பதைத் தெரிந்து பயிர் செய்ய வேண்டும். இல்லையென்றால் மழைக்காலத்தில் உப்பு விற்கும் கதையாகிடும். அதுபோல காலத்தோடு செய்ய வேண்டிய செயலைக் காலம் கடத்திச் செய்வதன் மூலம் அச்செயலுக்குக் கிடைக்க வேண்டிய பலன் முழுமையாகக் கிடைக்காமல் போகலாம். ஆகவே அந்தந்தக் காலத்தில் செய்ய வேண்டியவற்றைச் சரியாக நேர்த்தியாகச் செய்ய நேர மேலாண்மை மிக மிக அவசியம்.

22. **முடிந்தால் தரலாம்:** ஒரு பொருளைக் கொடுக்க முடிந்தால் கொடுக்கலாம் என்ற பொருளைத் தருகின்றது.
**முடித்தால் தரலாம்:** தரப்பட்டுள்ள வேலையை முடித்துவிட்டேன் என்றால் தரலாம் என்ற பொருளைத் தருகின்றது. மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவைப்படும் பொருட்களை **முடிந்தால் தரலாம்.**
ஆசிரியர் கூறியபடி செயல்திட்டப் பதிவேடுகளை **முடித்தால் தரலாம்.**

23. **அ) இனநிரை - இனம் + நிரை** ‘மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் ஆகும்’ என்ற விதிப்படி மவ்வீறு ஒற்றழிந்து ‘இனநிரை’ எனப் புணர்ந்தது.
**ஆ) அருங்கானம் - அருமை + கானம்** ஈறுபோதல் விதிப்படி ‘மை’ கெட்டது. இனமிகல் விதிப்படி ககரமெய்க்கு இனமான ஙகரமெய் தோன்றியது. (க்-ங்)

24. ‘திருவளர்செல்வன்’ என்ற தொடரே சரியான தொடர்.
‘வினைத்தொகையாக வரும் சொல்லுக்கிடையில் வல்லினம் மிகுதல் கூடாது’ என்ற இலக்கண விதியின் படி ‘திருவளர்செல்வன்’ என்ற வினைத்தொகையில் வல்லினம் மிகாது.

25. ஒரு விகற்பம் என்றால் வெண்பாவின் எல்லா அடிகளும் ஒரே எதுகை பெற்று வருவது ஆகும். பல விகற்பம் என்றால் வெண்பாவின் அடிகளில் வேறு வேறு எதுகை பெற்று வருவது ஆகும்.

26. **ஏதேனும் ஒன்றனுக்கு உறுப்பிலக்கணம் தருக.**
**அ) கண்டான் - காண் (கண்) + ட் + ஆன்**
காண்- பகுதி, ‘காண்’, ‘கண்’ - எனக்குறுகியது விகாரம்
ட் - இறந்தகால இடைநிலை
ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி
**ஆ) அறுத்து - அறு + த் + த் + உ**
அறு - பகுதி, த் - சந்தி, த் - இறந்தகால இடைநிலை,
உ - வினையெச்ச விகுதி

27. **கலை** - நுட்பம், ஆடை, கல்வி, கலைமான்;
**களை** - நீக்கு, அழகு; **கழை** - மூங்கில் கழைக் காட்டில் தீப்பிடித்ததால் களை செடிகளுடன் சேர்ந்து கலைமான்களும் தீக்கிரையாகின.

28. வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் **குருளையும்** யானைக் **கன்றையும்** கண்டேன்.

29. ஆசிரியருக்**குக்** கீழ்**ப்**படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை**த்** தெரிந்து கொண்டு, அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றை**க்** கற்று**க்** கொடுக்கும்.

30. பலகையால் ஆன மேசையில் உணவு உண்டனர்.
பல கைகள் ஒன்றிணைந்து வெற்றியைத் தமதாக்கின.

31. செந்நிறத்து வானம்போலத் தங்கள் கைகள் சிவந்திட உழைக்கும் தொழிலாளர்களின் வியர்வை வெள்ளம்அவர்களின் திரண்ட தோள்மீது முத்துமுத்தாய் வீற்றிருக்கும். இந்த அழகினை வியந்து பாடச் செந்தமிழின் துணைவேண்டுமெனக் கவிஞர் சிற்பி கூறுகின்றார்.

32. நன்றியானது, இந்நில உலகம், வானம், கடல், பனை இவற்றை விட உயர்ந்தது. ஒருவன் பிறருக்கு எந்த ஒரு உதவியும் செய்யாமலிருக்கும் நிலையிலும் அவர் நமக்குச் சரியான நேரத்தில் ஏதேனும் உதவி செய்தால், அந்த உதவிக்குக் கைம்மாறாக இந்த நிலவுலகத்தையும், வானுலகத்தையும் சேர்த்துக் கொடுத்தாலும் ஈடாகாது. ஒருவர் நமக்கு உரிய காலத்தில் செய்த உதவியானது அளவில் சிறியதாக இருந்தாலும், அவ்வுதவி இந்த உலகைவிடப் பெரியதாகும். ஒருவர் எந்தப் பயனையும் நம்மிடம் இருந்து எதிர்பார்க்காமல் நமக்குச் செய்த உதவியின் அளவை ஆராய்ந்து பார்த்தால், அதன் நன்மை கடலைவிடப் பெரியதாகும். ஒருவர் தினையளவு உதவியைச் செய்தாலும், அந்த உதவியின் பயனைத் தெரிந்தவர்கள், தினையளவு உதவியையும் பனையளவாகக் கொண்டு போற்றுவர் என்று பொய்யாமொழி கூறுகின்றது.

33. ஒருநெறிப்பட்ட மனத்துடன் நின்னுடைய மலர்போன்ற திருவடிகளை நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும். உள்ளத்தில் ஒன்றும் புறத்தில் ஒன்றுமாகப் பேசும் வஞ்சகர்தம் உறவு என்னைப் பற்றாதவாறு காக்க வேண்டும் எனக் கந்தவேளிடம் இராமலிங்க அடிகள் வேண்டுகிறார்.

34. **உவமை:** யானை புகுந்து உண்ணத் தொடங்கும் நிலத்தில் விளைந்த நெல்கதிர் அதன் வாயுள் புகுவதை விட கால்களில் மிதிபட்டு அழிவது மிகுதியாகி கெட்டு போகும்.
**பாடல் பொருள்:** முறையறியா மன்னன் மக்களை வற்புறுத்தி வரியை வசூல் செய்தால் மக்கள் துன்பப்பட்டு வரியைக் கொடுப்பர். அரசன் தனது தேவைக்கு அதிகமாக வரி வசூல் செய்தால் நாட்டு மக்கள் அவனது ஆட்சியை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.
**உவமையும் பொருளும் பொருத்தம்:** முறையறியா மன்னன் மக்களை வற்புறுத்தி வரியை மக்களிடம் இருந்து பெறுவது யானை புகுந்து உண்ணத் தொடங்கும் நிலத்தில் விளைந்த நெல்கதிர், அதன் வாயினுள் புகுவதைவிடக் கால்களில் மிதிபட்டு அழிவது மிகுதியாகவே இருக்கும். எவ்வித நலமும் கிடைக்காது. யானை தான் உண்ணும் அளவை விட கால்களால் அழிப்பது மிகுதியாதல் போல், அரசன் தனக்குத் தேவையான அளவையும் பெறாமல், அழிவுஅதிகமாகவே இருக்கும். அரசன் முறையறிந்து வரி வசூலித்தால் நாட்டு மக்கள் விருப்பத்தோடு அளித்து மக்களும் மகிழ்ச்சியோடு வாழ நாட்டின் செல்வ வளம் பெருகும். முறை அறியாது வரி வசூலிக்கும் மன்னனுக்கு யானையும், அதனால் அழியும் மக்களுக்கு மிதிபட்டு அழியும் கதிர்களும் உவமையாயின.

35. **விரிந்த குடும்பம்:** தனிக்குடும்ப அமைப்பில் பெற்றோர் ஒருவரின் தந்தையும் உடன் வாழ்வது விரிந்த குடும்ப அமைப்பு முறையாகும்.
**கூட்டுக் குடும்பம்:** இந்த விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே கூட்டுக் குடும்பமாக இன்றைய சமூகத்தில் மாற்றம் பெற்றுள்ளது. கூட்டுக் குடும்பம் என்பது பெற்றோர், அவர்களது மணமாகாத பிள்ளைகள், மணம் முடித்த பிள்ளைகள் அவர்களது துணைவர்,



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

அவர்களது பிள்ளைகள் இணைந்து வாழ்வதாகும். சில நேரங்களில் கூட்டுக்குடும்பங்களில் பெற்றோரின் உடன்பிறந்தவர்கள், பெற்றோர்களின் தாய், தந்தை, இரத்த உறவால் பிணைக்கப்பட்ட நேர்வழி, கிளைவழி உறவினர்கள் என அனைவரும் ஒரே வீட்டில் ஒரே குடும்பமாக வாழ்வது கூட்டுக் குடும்பமாகும்.

36. மாணாக்கர்களில் எல்லோரும் ஒரே கற்றல் அடைவைப் பெறும் மாணவர்கள் என்ற கருத்தியல் ரீதியான என் எண்ணத்தை முதலில் மாற்றுவேன். மாணாக்கர்களில் எல்லோருக்கும் ஒரே மாதிரியான அறிவு, திறன்கள், மனப்பாங்கு, பண்புகள் இருக்கப்போவதில்லை. மாணவர்களை ஒப்பிட்டுக் கூறமாட்டேன். மாணவர்களை இனம் கண்டறிந்து அம்மாணவனின் பின்னடைவிற்கான காரணங்களை ஆராய்ந்து அவனைத் தேற்றிவிடுவேன். மாணாக்கர்கள் நல்ல நிலையடைய சிறந்த வழிகாட்டியாக இருப்பேன். மாணாக்கர்களிடம் தகாத வார்த்தைகள் மற்றும் தேவையற்ற வார்த்தைகளை ஒருபோதும் பயன்படுத்த மாட்டேன். என் வகுப்பு மாணாக்கர்களை மாணவர்களுக்குரிய கண்ணியத்துடன் நடத்துவேன்.மாணாக்கர்களின் குடும்பச் சூழல்களை அறிந்து அவர்களுக்கு ஆறுதல் கூறும் ஆசானாய் இருப்பேன். மாணாக்கர்களுக்கு முரண்பாடாகவோ, எதிர்த்து நின்று செயல்படவோ, அவர்களை அடித்துத் துன்புறுத்தவோ, அவர்கள் மனம் வேதனை அடையும் செயல்களில் ஈடுபடவோ ஒரு போதும் விரும்பமாட்டேன்.

37. திரைப்படத்தில் காட்சி சிறப்பாக அமைந்தால், வசனம் இரண்டாம் பட்சமாகிவிடும். திரைப்படத்தில் வசனம் இன்றி, காட்சிகளை அடுத்தடுத்து வைத்துக் கதையை நகர்த்துவர். திரைப்படத்தில் நடிப்பவரை முப்பரிமாணத்தில் காட்டும் காட்சிகள் இடம்பெறும். ஒருவன் ஓடிவருவதாகக் காட்டிவிட்டு 'என்னாச்சி' என்று கேட்டால் போதும், இதுகாட்சி மொழியாகி விடும். ஒருவன் உணர்ச்சியைக் காட்ட முகத்தைக் காட்சியாகக் காட்டினால் போதும். கட்டுப்படுத்த முடியாத கோபத்தைக் காட்ட நடிகன் கத்த வேண்டியது இல்லை; கண்ணாடிக் குடுவையை இறுகப் பிடித்து உடைப்பதைக் காட்டினால் போதும். இப்படியாகக் கதை நகர்வுக்குத் திரைப்படக் காட்சி உதவுகிறது.

38. இன வரலாற்றை இலக்கியம், தொல்லியல், கல்வெட்டு, பண்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் தரவுகளைத் தேடி எழுதிய ஆளுமைகளில் முக்கியமானவர் மயிலை. சீனி. வேங்கடசாமி. 16.12.1900-ஆம் ஆண்டு சென்னை - மயிலாப்பூரில் பிறந்தவர். தந்தையார் சீனிவாசன் ஒரு சித்த மருத்துவர்; தமையனார் கோவிந்தராசன் ஒரு தமிழாசிரியர்; இதுவே இவர் வரலாற்று ஆய்வாளராக மிக முக்கியக் காரணம். விபுலானந்த அடிகள், கா.சுப்பிரமணியர், திரு.வி.க., தெ.பொ.மீ., ச.த.சற்குணர் ஆகிய அறிஞர் பெருமக்களோடு தொடர்பு கொண்டிருந்தவர். குடியரசு , ஊழியன், செந்தமிழ்ச்செல்வி, ஆரம்பாசிரியன், லக்ஷ்மி முதலான இதழ்களில் ஆய்வுக் கட்டுரைகள் எழுதியவர். தமது வாழ்வை முழுமையாகத் தமிழியல் ஆய்வுக்கு ஒதுக்கியவர்; நமது சுய அடையாளங்களை மீட்டுத் தந்தவர்.

39. **அணி இலக்கணம்:** ஒரு செய்யுளில் முதலில் ஒரு சொல்லையும் பொருளையும் வரிசையாக (நிரலாக) நிறுத்தி, அவ்வரிசைப் படியே பொருள் கொள்ளும் முறை நிரல் நிறையாகும். அதாவது சில சொற்களை முதலில் ஒரு வரிசையில் வைத்து, அச்சொற்களோடு தொடர்புடைய சொற்களை அடுத்த வரிசையில் முறைமாறாமல் சொல்வது நிரல் நிறை அணியாகும்.

**சான்று: 'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது'**

**பாடல் பொருள்:** இல்வாழ்க்கையில் நாம் அன்பும் அறனும் கொண்டு ஒழுகினால், அதுவே நமக்கு வாழ்க்கையின் பண்பினையும் பயனையும் முழுமையாகத் தரும்.

**அணிப்பொருத்தம்:** இக்குறட்பாவில் அன்பு, அறன் என்ற சொற்களை முதலில் ஒரு வரிசையில் நிறுத்திய திருவள்ளுவர் அவற்றோடு தொடர்புடைய பண்பு, பயன் என்பவற்றை முறையே அடுத்த வரிசையில் இணைத்துப் பொருள் கொள்ளுமாறு அமைத்துள்ளார். எனவே இந்தத் திருக்குறள் நிரல்நிறை அணியாகும்.

**அணி இலக்கணம்:** பாடலில் முன்னர் வந்த சொல்லே மீண்டும் மீண்டும் வந்து, தந்த பொருளையே மீண்டும் மீண்டும் தருமாயின் அது சொற்பொருள் பின்வருநிலையணி எனப்படும்.

**சான்று: எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்**
**திண்ணியர் ஆகப் பெறின்**

**சான்று விளக்கம்:** எண்ணியவர் மனவுறுதியுடையவராக இருந்தால், அவர் எண்ணியவற்றை எண்ணியவாறே அடைவர்.

**அணிப்பொருத்தம்:** இக்குறட்பாவில் 'எண்ணிய' என்ற சொல் மீண்டும் மீண்டும் வந்து 'நினைப்பது' என்ற ஒரே பொருளைத் தருவதால் இக்குறட்பாவில் சொற்பொருள்பின்வருநிலையணி பயின்று வந்துள்ளது.

40. **பழமொழி விளக்கம்:** தனி ஒருவனால் சாதிக்க முடியாத பல காரியங்களைக் கூட்டு முயற்சியினால் வெற்றி பெற செய்ய முடியும் என்பது இப்பழமொழியின் கருத்தாகும்.

**வாழ்க்கை நிகழ்வு:** எங்கள் வகுப்புத் தலைவனின் பெயர் கதிர். அவனுக்கும் எங்கள் வகுப்பு மாணவிகளுக்கும் அடிக்கடி சண்டை நடக்கும். பிறகு சிறிது மாதம் கழித்து எங்கள் வகுப்பே போர்க்களம் ஆகிவிட்டது. அனைவரும் ஒருவரையொருவர் குறை சொல்லி வந்தனர். எங்கள் வகுப்பாசிரியர் இவ்வாறு நடந்துகொள்வது தவறு என்று பலமுறை கூறி அனைவரையும் கடிந்துகொண்டார். இருப்பினும் சண்டைத் தொடர்ந்தது. ஒருநாள் எங்கள் வகுப்புத்தோழி கிரிஜாவை பக்கத்து வகுப்பைச் சார்ந்த ரோசி அடித்துவிட்டாள். அவள் ஆசிரியரிடம் கூறினால் உன் தம்பியை அடிப்பேன் என்று கூறியுள்ளாள். எனவே கிரிஜா ஓடிவந்து அழுதுகொண்டே எங்கள் வகுப்பின் நடுவில் தன்னைக் காப்பாற்ற வேண்டும் என்று முறையிட்டாள். கதிர் உடனே அவளருகில் சென்று நான் வந்து பார்க்கிறேன் என்று கூற அனைவரும் தாங்களும் வருகிறோம் என்று கூறினர். பின்னர் அனைவரும் சேர்ந்து ரோசியைத் திருத்திவிட்டு சென்றோம். அதன்பிறகு நாங்கள் ஒருபோதும் சண்டை போடுவதில்லை.

**நீதி:** நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து வாழ்ந்தால் பல கோடி நன்மைகளைப் பெற முடியும் என்பதை விளக்கும் பழமொழி இதுவாகும்.

41. 1. கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு
2. புதிய மொழி புதிய வாழ்க்கை
3. மொழிகளின் அறிவு ஞானத்தின் திறவுகோல்/ வழித்தடம்.
4. என் மொழியின் எல்லை என் உலகத்தின் எல்லை.

42. **'நல்லதைச் செய்வோம்'**

**முன்னுரை:** தமிழின் மீது அளவற்ற அன்பு கொண்ட கவிமணி, 'குழந்தைகள் கவிஞர்' என்று அழைக்கப்படுகின்றார். 'தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு' என்ற பாடல் மூலம் குழந்தைகளால் மிகவும் நேசிக்கப்படுபவர். கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் எழுதியுள்ள இப்பாடலின் நயங்களைக் காண்போம்.

**திரண்ட கருத்து:** பிறப்பை வைத்து யாருக்கும் இந்த உலகில் பெருமை வருவதில்லை; உலகில் சிறந்தவர்களாக இருக்க வேண்டும் என்றால் நல்ல செயல்களைச் செய்ய வேண்டும். உலகில் மேல்குலத்தோர் என்போர் தன் வாழ்வில் நன்மை செய்பவர்களே! தீமை செய்பவர்களே இந்த உலகில் தீண்டத்தகாதவர்கள்.

**மையக்கருத்து:** நன்மை செய்தால் அவன் மேன்மையடைவான்; தீமை செய்தால் ஒதுக்கப்படுவான்.

**சொல் நயம்: "சொற்களைச் சிறந்த முறையில் வைப்பது வசனம், சிறந்த சொற்களைச் சிறந்த முறையில் வைப்பது கவிதை" - கோல்ரிட்ஜ்** சிறந்த சொற்களைக் கொண்டு கவிதையை நயம்பட பாடியுள்ளார் கவிஞர். இப்பாடலில் அடைச்சொல்லையும், அகராதிச் சொல்லையும் கவிஞர் பயன்படுத்தியுள்ளார்.

சான்றாக, அடைச்சொல் - அண்டித்தீண்ட
அகராதிச் சொல் - ஒண்ணாதார் - ஒவ்வாதார்

**பொருள் நயம்:** இவ்வுலகில் மேற்குலத்தோர், தீண்டதகாதவர் என்பது பிறப்பினால் வருவதல்ல அவரவர்களின் செய்கையால் வருகின்றது என்ற பொருளை வலியுறுத்த சிறந்த சொற்களைக் கொண்டு கவிஞர் இக்கவிதையை இயற்றியுள்ளார்.

**தொடை நயம்:** பாடலில் மோனை, எதுகை, இயைபு, முரண், அளபெடை ஆகியவற்றைக் கொண்டு தொடுப்பது தொடையாகும்.

**மோனை நயம்: "அடிதொறுந்தலைஎழுத்து ஒப்பது மோனை" - தொல்காப்பியம்** சீர்களிலோ, அடிகளிலோ முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனையாகும்.

**சான்று:** பிறப்பினால் -பெருமை, சிறப்பு -செய்கை
நன்மை -நாடும், தின்மை -தீண்ட

**எதுகை நயம்: "அடிதொறுந்தலைஎழுத்து ஒப்பது மோனை அஃது ஒழிந்த வற்றின் எதுகை ஆகும்" - தொல்காப்பியம்**

பாடலின் அடிதோறும் அல்லது சீர்தோறும் முதலெழுத்து அளவொத்து நிற்க இரண்டாவது எழுத்து ஒன்றி வருவது எதுகை எனப்படும். இப்பாடலில் அடி எதுகை பயின்று வந்துள்ளது.

**சான்று:** பிறப்பினால், சிறப்பு, நன்மை, தின்மை

**இயைபு நயம்: "இறுவாய் ஒப்பின் அது இயைபு என மொழிப" - தொல்காப்பியம்** ஒரு செய்யுளில் ஒன்றுக்கு மேற்பட்ட அடிகளின் இறுதி எழுத்து அல்லது இறுதிச் சொல் அல்லது ஒரே அடியில் உள்ள சீர்களின் இறுதி எழுத்துகள் ஒன்றி வந்தாலும் அஃது இயைபு எனப்படும். இப்பாடலில் அடி இயைபு பயின்று வந்துள்ளது.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

**சான்று:** வாராதப்பா மேற்குலத்தார்
வேண்டுமப்பா ஒண்ணாதார்

**முரண் நயம்: ''மொழியினும் பொருளினும் முரணுதல் முரணே'' - தொல்காப்பியம்** செய்யுளில், சொல் அல்லது பொருள் முரண்பட்டு நயம் பயக்கும் வகையில் அமைவது முரண் தொடையாகும். இப்பாடலில் இடம் பெற்றுள்ள முரண் தொடை நன்மை x தின்மை

**சந்த நயம்: ''சந்தம் தமிழுக்குச் சொந்தம்''** இப்பாடலை ஏற்ற இசைக் கருவிகளுடன் இசைத்துப் பாடினால், பாடுவோர்க்கும் கேட்போருக்கும் மிகுந்த கவி இன்பத்தைத் தரும் சந்த நயங்களுடன் கவிஞர் இப்பாடலை இயற்றியுள்ளார். இப்பாடல் **சிந்துப்பா** வகையைச் சார்ந்தது.

**அணி நயம்: ''அணி செந்தமிழ் கவிதைக்குப் பணி''** இப்பாடலில் உள்ளதை உள்ளபடியே கவிஞர் கூறுவதால் இப்பாடலில் இயல்பு நவிற்சி அணி பயின்று வந்துள்ளது.

**முடிவுரை:** கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை இப்பாடலில் கவிதைக்குரிய நயங்களை எல்லாம் அமைத்து, கவி நயங்களால் தமிழன்னைக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

---

**44.** இராமன் அனைத்து உயிர்களையும் கீழ் மேல் எனக் கருதாது சமமாக அன்பு காட்டும் பண்பின் அடையாளமாக விளங்குகின்றான். தந்தை, தாய் மீதான அன்பு, உடன்பிறப்புகள் மீது அன்பு ஆகியவற்றை எல்லைகள் அனைத்தையும் கடந்து இராமன் விரிவுபடுத்துகிறான். வேடன், பறவை, எளிய முதியவள், வானரம், எதிரியின் தம்பி என்ற வேலிகள் அவன் அன்பிற்குத் தடையாக இருக்கவில்லை.

**மகன் என்ற உறவு நிலை :** சீதையை இராவணன் சிறை எடுத்துச் சென்றபோது அதனைத்தடுத்து இராவணனுடன் போரிட்டு, காயமடைந்து பின் உயிர் துறந்தான் சடாயு. கேள்விப்பட்ட இராமன் மிகுந்த வருத்தமடைந்தான். தன் தந்தை தசரதனின் நண்பனான சடாயுவைத் தன் தந்தையாகக் கருதி, தந்தைக்கு மகன் செய்யும் இறுதிச் சடங்குகளை முறையாகச் செய்தான். தன்னையே நினைத்துத் தவம் செய்து கொண்டிருந்த எளிய முதியவளான சவரியிடம் தாயிடம் காட்டும் அன்பைக் காட்டினான். அவள் இராமனைப் பார்த்ததால் தான் மேற்கொண்ட தவம் பலித்தது என்று கூறி இனிய உணவினை விருந்தாகப் படைத்தாள். அவள் அன்பில் மனம் மகிழ்ந்த இராமன் தன் தாயாக அவளை நினைத்து, மகன் தாய்க்குச் செலுத்தும் அன்பைச் செலுத்தினான்.

**உடன்பிறப்பு என்ற உறவுநிலை :** தன்மீது அளவற்ற அன்பைக் கொண்டிருந்த குகன், தன்னைப் பிரிய மனமில்லாமல் வருந்துவதை இராமன் அறிகின்றான். இராமன் குகனிடம், ''முன்பு உடன் பிறந்தவர்கள் நான்குபேராக இருந்தோம். இப்போது உன்னையும் சேர்த்து ஐந்து பேராக உள்ளோம்'' என்றான். இலங்கை சென்று இராவணனுடன் கடும்போர்புரிந்து திரும்பிய சுக்ரீவனின் செயலைக் கண்டு வியந்த இராமன் சுக்ரீவனிடம் நீ வேறு நான் வேறல்ல; என்று கூறுகின்றான். அத்துடன் சுக்ரீவனையும் தன் உடன்பிறப்பாக ஏற்றுக் கொள்கின்றான். சீதையைக் கவர்ந்து வந்த இராவணனின் செயலைக் கண்டித்தான் வீடணன். இராவணன் அவனைக் கடிந்து கொண்டதால் இலங்கையை விட்டு வெளியேறிய வீடணன் இராமனிடம் அடைக்கலமானான். வீடணனுக்கு இலங்கையை ஆளும் உரிமையைக் கொடுத்ததுடன் அவனையும் தன் உடன்பிறப்பாக இராமன் ஏற்றுக் கொள்கின்றான். இவ்வாறாக இராமன் பணியாளனாய்; சகோதரனாய்; தந்தைக்கு உற்ற மகனாய்; தாய் மீது அன்பு கொண்ட சேயாய்; உயிர்தரும் நண்பனாய்; உரிமையை வழங்கும் உடன்பிறப்பாய் பிற உயிர்களுடன் உறவு கொண்டிருந்தான். **(அல்லது)**

---

**ஈடில்லா உதவி:** ஒருவன் பிறருக்கு எந்த ஒரு உதவியும் செய்யாமலிருக்கும் நிலையிலும் அவர் நமக்குச் சரியான நேரத்தில் ஏதேனும் உதவி செய்தால், அந்த உதவிக்குக் கைம்மாறாக இந்த நிலவுலகத்தையும், வானுலகத்தையும் சேர்த்துக் கொடுத்தாலும் ஈடாகாது.

**உலகினும் பெரிய உதவி:** ஒருவர் நமக்கு உரிய காலத்தில் செய்த உதவியானது அளவில் சிறியதாக இருந்தாலும் அவ்வுதவி இந்த உலகைவிடப் பெரியதாகும்.

**பயன் எதிர்பாராத உதவி:** ஒருவர் எந்தப் பயனையும் நம்மிடம் இருந்து எதிர்பார்க்காமல் நமக்குச் செய்த உதவியின் அளவை ஆராய்ந்து பார்த்தால், அதன் நன்மை கடலைவிடப் பெரியதாகும்.

**உதவியின் பயன் பனையளவு:** ஒருவர் தினையளவு உதவியைச் செய்தாலும், அந்த உதவியின் பயனைத் தெரிந்தவர்கள், தினையளவு உதவியையும் பனையளவாகக் கொண்டு போற்றுவர்.

**அறத்தை அறிக:** ஒருவர் நமக்குச் செய்த நன்மையை ஒருநாளும் மறக்கக்கூடாது. ஆனால், ஒருவர் நமக்குச் செய்த தீமையை அப்பொழுதே மறந்துவிட வேண்டும்.

**தப்பிக்க கூடுதல் வழி:** ஒருவர் எந்த அறத்தை அழித்தாலும் அதிலிருந்து தப்பிப் பிழைக்க வாய்ப்பு உண்டு. ஆனால், ஒருவர் செய்த உதவியை மறந்தவர்க்கு அதிலிருந்து தப்பிப்பிழைக்கும் வழியே கிடையாது.

---

**45. முன்னுரை:** காவிரி ஆற்றங்கரையில் அமைந்துள்ள திருச்சிராப்பள்ளி தமிழகத்தின் மூன்றாவது பெரிய நகரமாகும். இந்தியாவின் தூய்மையான 10 நகரங்களில் திருச்சியும் ஒன்றாகும். இந்நகரம் குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

**பெயர்க்காரணம்:** திருச்சிராப்பள்ளி என்ற பெயர் 'திரிஷிராபுரம்' என்ற வடமொழிச் சொல்லில் இருந்து தோன்றியதாக நம்பப்படுகிறது. மூன்று சிரங்களைக் கொண்ட 'திரிசிரன்' சிவபெருமானை வழிபட்டு பலனடைந்ததாக இந்து சமயப் புராணங்கள் கூறும். 'சிறுத்த-பள்ளி' என்ற சொல்லில் இருந்து உருவாகியிருக்கும் என்று சி.பி. பிரவுன் எனும் தெலுங்கு அறிஞர் கூறுகிறார். 16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்வெட்டு ஒன்றில் திருச்சிராப்பள்ளி, திரு - சிலா - பள்ளி (புனித - பாறை - ஊர்) எனக் குறிப்பிட்டுள்ளதால் அதிலிருந்து இப்பெயர் வந்திருக்கலாம் என்ற கருத்தும் உள்ளது. இது 'தென்னாட்டுக்கலை நகரம்' எனவும் அழைக்கப்படுகிறது.

**வரலாறு:** தமிழ்நாட்டில் மக்கள் வாழ்ந்த மிகப் பழமையான நகரங்களில் ஒன்று திருச்சி. கி.மு இரண்டாயிரமாண்டு காலத்திற்கு முந்தையது. முற்காலச் சோழர்களின் தலைநகராக கி.மு.3-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.3-ஆம் நூற்றாண்டு வரை விளங்கிய உறையூர் தற்போதைய திருச்சியின் சுற்றுப்புறத்தில் அமைந்துள்ள பகுதியாகும். கரிகால் சோழன் கட்டிய கல்லணை உறையூரில் இருந்து 20 கி.மீ தொலைவில் உள்ளது. பல்லவர்கள் கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் இருந்து 6-ஆம் நூற்றாண்டு வரை ஆட்சி செய்தனர். அதன்பின் பிற்காலச் சோழர்கள், பாண்டியர்கள், ஆட்சிக்குப் பின்பு விஜய நகரப் பேரரசின் கீழ் வந்தது. மதுரை நாயக்கர்களின் வழியில் வந்த இராணி மங்கம்மாள் திருச்சி மலைக் கோட்டைப் பகுதியில் கட்டிய அரண்மனை அரசு அருங்காட்சியகமாகச் செயல்பட்டு வருகிறது.

**நகரமைப்பு:** நகரத்தின் வடபகுதியில் தொழிற்பேட்டைகளும், வசிப்பிடங்களும் நெருக்கமாக அமைந்துள்ளன. நகரத்தின் தென்பகுதியில் குடியிருப்புப் பகுதிகள் நிறைந்துள்ளன. நகரைச் சுற்றிலும் வயல்வெளிகள் சூழ்ந்துள்ளன. கோட்டைக்குள் அடங்கியுள்ள பழைய நகரம் திட்டமிடப்படாததாகவும் நெரிசல் மிக்கதாகவும் விளங்குகிறது. புதிய நகர்ப்புறப் பகுதிகள் திட்டமிடப்பட்டுக் கட்டமைக்கப்பட்டுள்ளன. ஸ்ரீரங்கத்தில் அமைந்துள்ள பல வீடுகள் தொன்மையான இந்து சமய கோவில் வடிவமைப்புகளுக்கான சிற்ப சாத்திரங்களுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளன. திருச்சிராப்பள்ளி 65 பகுதிகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு மண்டலத்திற்கும் 15 பகுதிகள் வீதம் 4 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

**போக்குவரத்து:** தரைவழிப் போக்குவரத்தில் தேசிய நெடுஞ்சாலைகள் 45, 45ஆ, 67, 210, 227 ஆகியவை திருச்சி வழியாகச் செல்கின்றன. இரண்டு பேருந்து நிலையங்கள் உள்ளன.

திருச்சிராப்பள்ளி சந்திப்பு, தென்னக இரயில்வேயின் ஆறுகோட்டங்களில் ஒன்றாகும். 1868-ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து சேவை நடைபெறுகிறது. சென்னைக்கு அடுத்து இரண்டாவது பெரிய வானூர்தி நிலையம் திருச்சிராப்பள்ளி வானூர்தி நிலையமாகும்.

**கல்வி:** திருச்சியிலும் அதன்புறநகர் பகுதியிலுமாக 30-க்கும் மேற்பட்ட கல்லூரிகள் உள்ளன. சட்டப்பல்கலைக்கழகமும், பாரதிதாசன் பல்கலைக்கழகமும் வேளாண்மைக்கல்லூரியும் உள்ளன. மருத்துவக்கல்லூரியும் உள்ளது.

**சுற்றுலாத் தலங்கள்:** திருச்சி மலைக்கோட்டை, ஸ்ரீரங்கம், திருவானைக்கோவில், இராணி மங்கம்மாள் கொலு மண்டபம், முக்கொம்பு, கல்லணை, முதலாம் உலகப்போர் நினைவுச்சின்னம் ஆகியவை குறிப்பிடத்தகுந்தவை.

**முடிவுரை:** மிகவும் புகழ்பெற்ற மலைக்கோட்டையைக் கொண்ட பண்பாட்டு நகரமாக விளங்கும் திருச்சி தமிழ்ப்பண்பாட்டினை உலகிற்கு எடுத்துச் செல்லும். **(அல்லது)**

---

**முன்னுரை:** பணியாளர்களைக் கொண்டு செயல்களைச் செய்யும் ஒரு கலையே மேலாண்மை. மேலாண்மை ஒரு அறிவியல் சார்ந்த பகுதியாக இருக்கின்றது எனக் கருதுகின்றனர். சுருக்கமாகக் கூறின் ஒரு நிருவாகத்தின் திட்டமிட்ட நோக்கங்களை அடைய உதவுகின்ற உலகத்தால் ஒத்துக் கொள்ளப்பட்ட முறையே மேலாண்மையாகும்.

**நிருவாக மேலாண்மை:** உயர் பதவிகளில் இருப்பவர்கள் எல்லாவற்றிலும் நிபுணத்துவம் பெற்றவர்களாக இருப்பது சாத்தியமில்லை. ஆனால் யார் திறமைசாலிகள் என்று அறிந்து அவர்களை அருகில் வைத்துக் கொண்டால் போதும். தெரிந்திருப்பது ஒருவகை அறிவு என்றால், யாருக்குத் தெரியும் எனத் தெரிந்திருப்பது மற்றோர் அறிவு. நாலடியார் அதையே பக்குவமாகச் சொல்கிறது.

**''கல்லாரே யாயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின்
நல்லறிவு நாளும் தலைப்படுவர் தொல்சிறப்பின்**



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

**ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்ந்தலாற் புத்தோடு**
**தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு''** - 139

**நிருவாகத்தின் வரவு செலவு:** நிருவாகத்தில் வரவே செலவைத் தீர்மானிக்க வேண்டும். வரவைத் தாண்டி நிறையச் செலவு செய்பவன் அடுத்தவர்களிடம் கையேந்த வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்படுவான்.

**வாழ்வியல் விளக்கம்: (டைமன் - ஷேக்ஸ்பியரின் நாடகம்)** டைமன் என்பவன் ஏதென்ஸ் நகரில் இருந்தான். அவன் வரவு குறைந்தாலும் செலவு நீடித்தது. அவனது உதவியாளர் நிதி நிலைமையைப் பற்றிப் பேசவருகிற பொழுதெல்லாம் கேட்க மறுத்தான். ஒரு கட்டத்தில் கடன் கொடுத்தவர்கள் கழுத்தை நெரிக்கிறார்கள். ஆனால் அப்போதும் அவன் வருந்தவில்லை. தான் அளித்த விருந்தை உண்டவர்கள், உதவுவார்கள் என்று பொய்க்கணக்குப் போடுகிறான். அவனுடைய சேவகர்கள் நான்கு திசைகளுக்கும் சென்று வெறும் கையோடும், வெளிறிய முகத்தோடும் திரும்புகிறார்கள். அவன் ஊருக்கு ஒதுக்குப்புறமாகச் செல்கிறான். மனித இனத்தையே வெறுக்கிறான். 'டைமன்' பற்றிய ஷேக்ஸ்பியரின் நாடகம் நிதி மேலாண்மை பற்றிய மிகச் சிறந்த வாழ்வியல் விளக்கம்.

**முடிவுரை:** ஔவையார் நல்வழியில்,
**''ஆன முதலில் அதிகம் செலவானால்**
**மானம் அழிந்து மதிகெட்டுப் போனதிசை**
**எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்**
**நல்லார்க்கும் பொல்லனாம் நாடு** (25) என்று நிதியைக் கண்டபடி கையாள்பவர்களுக்கு அறிவுறுத்துகிறார்.

---

**46. மொழிப்பற்று:** யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல இனிதான மொழி எதுவுமில்லை என்று கூறிய பாரதி, தான் சு.நெல்லையப்பருக்கு எழுதிய கடிதத்திலும் அதனை உறுதிப்படுத்துகின்றார். நெல்லையப்பரிடம் அவர் கூறும்போது, 'நீ பிறமொழிகளை அறிந்திருந்தாலும் தமிழை வளர்ப்பதைக் கடமையாகக் கொள்ளவேண்டும்' என்று கூறுகின்றார். புதிய புதிய செய்திகளும் புதிய புதிய உண்மைகளும், புதிய புதிய இன்பமும் தமிழ்மொழியில் ஏற்றம் பெற வேண்டும். தமிழ்நாட்டில் வீதிகள் தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் பெருக வேண்டும். அந்தப் பள்ளிகளில் எல்லாம் புதிய புதிய கலைகள் பயிற்சி அளிக்கப் பெற்று வளர வேண்டும். தாய் மொழியிலே கற்பதால் தமிழ் உணர்வு அதிகமாகும், தாய்நாட்டின் மீது பற்று ஏற்படும். பிறநாட்டு மொழிகள் எல்லாம் அடைந்துள்ள வளர்ச்சியைப் பார்த்த பின்பாவது நாம் நம் தாய்மொழியாம் தமிழ்மொழியின் மீது பற்றுக் கொள்ள முயலவேண்டும். புதிய புதிய சிந்தனைகள் தமிழ்மொழியில் தோன்றல் வேண்டும் என்கிறார்.

**சமூகப்பற்று:** சமூகத்தின் அவலமாக இருக்கின்ற ஆண் பெண் வேறுபாடு முற்றிலுமாக அழிய வேண்டும். ஆண் உயர்ந்தவன் பெண் அடிமை என்ற நிலை சமூக அவலமாகும். ''ஆணும் பெண்ணும் ஒருயிரின் இரண்டு தலைகள், அவற்றில் ஒன்றிலொன்று தாழ்வில்லை'', என்கிறார். பெண்ணைத் தாழ்த்தினால் சமூகமே சாபக்கேட்டிற்குள்ளாகும் என்பதை உணர்த்த பெண்ணைத் தாழ்த்தினவன், தன் கண்ணைக் குத்தியவனுக்குச் சமம் என்று ஆவேசத்துடன் கூறுகின்றார். பெண்ணை வீட்டுக்குள்ளே அடைத்தவன் தன் கண்ணை இழந்த குருடன் போலப் பரிதவிப்பான் என்றும் கூறி ஆணும் பெண்ணும் சமம் என்ற சமூக நீதியை வலியுறுத்துகின்றார். சமூகம் வளர்ச்சி அடையத் தொழில் பெருக வேண்டும், வியாபாரம் சிறக்க வேண்டும், தொழிற்சாலைகள் வளர வேண்டும் என்கிறார். சமூக மாற்றம் காண சங்கீதம், சிற்பம், இயந்திரம், பூமி, வானம், இயற்கை சார்ந்த நூல்கள் ஆயிரம் ஆயிரமாகத் தாய்மொழியில் உருவாகிட வேண்டும். நம் தமிழ்ச்சமூகம் மாற்றம் பெற அனைவரும் எண்ணிட வேண்டும். அதற்குரிய சக்தியை அனைவரும் பெற்றிடவும் வேண்டுமென்று பாரதியார் சு.நெல்லையப்பருக்கு எழுதிய கடிதம் மூலம் தன் உள்ளக் கருத்தை வெளிப்படுத்துகின்றார். **(அல்லது)**

---

**முன்னுரை:** நம் நாடுதான் உலகிலேயே அதிக சாலைப் போக்குவரத்து வசதிகளைக் கொண்ட இரண்டாவது பெரியநாடு. இந்தியாவில் ஓர் ஆண்டிற்கு ஏறக்குறைய ஐந்து இலட்சம் விபத்துகள் நடக்கின்றன. குறிப்பாகத் தமிழ்நாடுதான் இந்தியாவிலேயே மிகுந்த சாலை விபத்துகள் நடக்கும் மாநிலமாக இருக்கிறது. இந்தியாவில் ஏற்படும் மொத்தச் சாலை விபத்துகளில் 15 விழுக்காடு விபத்துகள் தமிழ்நாட்டில் நடப்பது வேதனைக்குரியது. வருங்காலங்களில் சாலை விபத்துகளைத் தவிர்த்து சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு உருவாக நாம் செய்ய வேண்டியவற்றைப் பற்றிக் காண்போம்.

**வாகன விபத்துகள் நடைபெறக் காரணங்கள்:** தமிழ்நாட்டில் நடைபெறும் மொத்த விபத்துகளில் 35 விழுக்காடு இருசக்கர ஊர்திகளால் ஏற்படும் விபத்துகளாக உள்ளன. பதினெட்டு வயது நிறைந்தவர்கள் மட்டுமே முறையான பயிற்சியின் மூலம் ஓட்டுநர் உரிமத்தைப் பெற்று, இருசக்கர ஊர்தியை இயக்க வேண்டும். பள்ளி மாணவர்கள் இருசக்கர வாகனம் ஓட்டுவது சட்டப்படி குற்றமாகும். மேலும், இருசக்கர வாகனத்தில் தலைக்கவசம் அணியாமல் செல்வது, இரண்டு பேருக்கும் மேற்பட்டோர் பயணிப்பது, கைபேசியில் பேசிக்கொண்டே செல்வது, சாலையில் ஊர்தியைக் குறுக்கும் நெடுக்கமாக இயக்குவது, போட்டிப் பந்தயம் எனச் சொல்லிப் பொது வழியில் உச்ச வேகத்தில் ஓட்டுவது, காதணி கேட்பிகள் பொருத்திக் கொண்டு ஊர்திகள் ஓட்டுவது போன்ற பல காரணங்களால் இருசக்கர வாகன விபத்துகள் பெருமளவில் நடக்கின்றன. இத்தகைய ஒழுங்கீனச் செயல்களைத் தவிர்த்தால் விபத்துகள் ஏற்படாது.

**சாலை விதிகள்:** மொழி வேறுபாடுகளற்ற குறியீடுகள் எளிதில் மக்களுக்குப் புரியும் என்பதற்காக இவை உருவாக்கப்பட்டன. சாலைகளில் இடம்பெற்றிருக்கும் குறியீடுகள் போக்குவரத்தினைச் சீர் செய்யவும் பாதுகாப்பாகப் பயணிக்கவும் உதவுகின்றன. அவற்றை 1) உத்தரவுக் குறியீடுகள் 2) எச்சரிக்கைக் குறியீடுகள் 3) தகவல் குறியீடுகள் என மூன்றாகப் பிரித்து அறியலாம். இத்தகைய சாலை விதிகளைப் பின்பற்றிப் பயணங்களை மேற்கொள்ளும் பொழுது விபத்தில்லாத தமிழ்நாடு உருவாகும். வாழ்வும் பயணங்களும் இன்பமாகும்.

**மோட்டார் வாகனச் சட்டம் 2017 - குறிப்பிடுபவற்றைப் பின்பற்றல்:** 18 வயது நிறைவடையாத குழந்தைகள் ஊர்தி இயக்கினாலோ விபத்தினை ஏற்படுத்தினாலோ அக்குழந்தைகளின் பெற்றோர்களுக்கு 3 ஆண்டு சிறைத்தண்டனை. ஓட்டுநர் உரிமம் இல்லாமல் ஊர்தியை இயக்கினால் ரூ.5000/- தண்டத்தொகையோ மூன்று மாதச் சிறைத் தண்டனையோ அல்லது இரண்டும். அபாயகரமான முறையில் ஊர்தியை ஓட்டினால் ரூ.5000/- தண்டத்தொகை. மது குடித்துவிட்டு ஊர்தியை இயக்கினால் ரூ.10,000/- தண்டத்தொகை. இருவருக்கு மேல் இரண்டு சக்கர ஊர்தியில் பயணித்தால் ரூ.2000/- தண்டத்தொகையுடன் மூன்று மாதங்களுக்கு ஓட்டுநர் உரிமம் நீக்கம் செய்யப்படும். தலைக்கவசம் அணியாமல் இருசக்கர ஊர்தியை இயக்கினால் ரூ.1000/- தண்டத்தொகையுடன் மூன்று மாதங்களுக்கு ஓட்டுநர் உரிமம் நீக்கம் செய்யப்படும். ஊர்திகளுக்குக் காப்பீடு இல்லாமல் இயக்கினால் ரூ.2000/- தண்டத்தொகை கட்ட நேரும். இவைகளை முறையாக அரசு கடைபிடிக்க வேண்டும்.

**விழிப்புணர்வை ஏற்படுத்துதல்:** பள்ளி மாணவர்களிடம் சாலை விதிகள் மற்றும் விபத்துகளைத் தடுப்பது குறித்த விழிப்புணர்வு மிகுந்த அளவில் ஏற்பட வேண்டும். மாணவர்கள் சிலர் சாலைகளில் விளையாடுவது கவனிக்காமல் திடீரென்று சாலையைக் கடப்பது, சாலையின் நடுவே செல்வது, சாலையை அடைத்துக் கொண்டு செல்வது, வேகமாகச் செல்லும் வாகனத்தின் பின்புறத்தைப் பிடித்துக் கொண்டு மிதிவண்டியில் செல்வது ஓடும் பேருந்தில் ஏறுவது இறங்குவது, பேருந்தின் படிக்கட்டில் தொங்கிக் கொண்டு பயணம் செய்வது போன்ற செயல்களில் ஈடுபடுகின்றார்கள். இதனால் மாணவர்கள் தங்கள் உயிரையும் உடலுறுப்புகளையும் இழக்க நேரிடுகிறது. இது அவர்களின் குடும்பத்துக்கும் சமூகத்துக்கும் பெரிய இழப்பு. இந்த நிலை எதிர்வரும் காலங்களில் முற்றிலும் மாற வேண்டும்.

**முடிவுரை:** விபத்துகள் எதிர்பாராமல் ஏற்படுகின்றன. மனிதத் தவறுகளே மிகுதியான விபத்துகளுக்குக் காரணங்களாக அமைகின்றன. தவறுகளைத் திருத்திக் கொள்ளுதல், விதிகளைப் பின்பற்றுதல் வாயிலாக மட்டுமே சாலை விபத்துகளைத் தடுத்து சாலை விபத்தில்லாத தமிழ்நாட்டினை உருவாக்க முடியும்.

---

**47. அ)** ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவுவேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமைவேண்டும்
பெருமைபெறும் நினதுபுகழ் பேசவேண்டும்பொய்மை
பேசா திருக்கவேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்
பிடியா திருக்கவேண்டும்.

**பாவகை :** பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

---

**ஆ)** நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும்.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com